# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 8:1 பங்குனி 2006


* சர்வதேச பெண்கள் தின அழைப்பு ....
* சுயதொழில் ....
* விளக்கின் அடியில் ....
* மலையகப் பெண்களின் ....
* பறக்காத பட்டங்கள்....
* தீயாக நீ ...


வாழ்வை ரணமாக்கி
விடியலை இருளாக்கி
வெந்த வாழ்வை
பயந்த மனங்களுடன்
சுமந்து முடிப்பதற்கா
குந்தியிருக்கிறோம்....?

ஆசிரியை

## சர்வதேச பெண்கள் தின அழைப்பு - 08 மார்ச் 2006

பெண்கள் தமது முன்னேற்றப்பாதையில் முன் வைத்த பல்வேறு கோரிக்கைகளின் மீது அடைந்துள்ள வெற்றிகளையும் அவர்களது ஒன்றிணைந்த செயற்பாடுகளையும் நினைவுறுத்தும் வகையில் சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப் படுகின்றது. மேலும், இன்னும் அவர்கள் முன்னாலுள்ள சாவால்களை ஒரு குரலில் எடுத்துக் கூறும் தினமாகவும் இது அமைகிறது. பெண்களின் கூட்டுணர்வும், கூட்டுச் செயற்பாடுகளும் இத் தினத்தில் வெளிப்படுகின்றன. எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெண்கள் உழைப்பு முக்கியம் பெறுகிறது. ஆனால் அதற்கான போதிய அங்கீகாரம் இல்லை. பெண்களது உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான கொள்கைகளும் திட்டங்களும் போதாமலே உள்ளன.





பெண்களுக்கெதிரான உரிமை மீறல்களையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் இன்று வரை காண்கிறோம். ஒவ்வொரு சமாதான பின்னடைவுகளின் போதும் பாதிக்கப்படுவர்களாய் அதிகம் பெண்கள் உள்ளனர்....

அரசியல் தளம்பல்கள், பெண்களின் உரிமைகள் மீறப்படாது பாதுகாக்கும் கொள்கைகளை அமுலாக்க முடியாதபடி தட்டிவிடுகிறது. எழுதப்பட்ட சட்டங்கள் எட்ட வேண்டிய இடங்களில் எடுபடாமலே உள்ளது. பெண்களுக்கான வாழ்வின் உரிமை வாசிக்கப்படாமலே போகிறது.



ஓட்டைக் குடங்களில் தண்ணீராய் பெண்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் எடுத்து வரப்படுகிறது. காலம் காலமாக பெண்களின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆற்றல்கள், உழைப்பு, தீர்மானங்கள், உரிமைகள் மறக்கப் படுகிறது, மறுக்கப்படுகிறது. ஒடுக்கப்படுகிறது, மழுங்கடிக் கப்படுகிறது. இதனால் பெண்களுக்கெதிரான வன்முறை தோற்றுவிக்கப்பட அவர்கள் நலன்கள் கேள்விக்குள்ளாகிறது.

யுத்தத்தின் கொடூரத்தில் மக்கள் வாழ்விழப்பதையோ; தமது கனவுகள் அர்த்தங்கள் கலைய சாம்பல் மேடுகளில் நாட்டின் அபிவிருத்தி, எதிர்கால அத்திவாரங்கள் போடப்படுவதையோ பெண்கள் விரும்பவில்லை. அவர்கள் சந்தோசமான, சமத்துவமான வீடும் நாடும் உருவாகுவதையே விரும்புகின்றனர். ஆகவே பெண்களுக்கெதிரான வன்முறைகள் களையப்பட்டு. அபிவிருத்தி, சமாதான முன்னெடுப்புக்களில் பெண்களின் கருத்துக்கள், தீர்மானங்கள் உள்வாங்கப்பட்டு பெண்கள் சம அந்தஸ்துடன் வாழ்ந்தாலே நாட்டின் உண்மையான அபிவிருத்தியை அடைய முடியும். அதற்காக இச் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமானது பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்கிறது.

- பெண்களது உழைப்பு, செயற்பாடுகள் சகல தளங்களிலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- பெண்களது உரிமைகளை அனைத்து மட்டங்களிலும் அங்கீகரிக்கும் வகையில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதுடன், ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.
- அபிவிருத்தித் திட்டங்களின் போதும் சமாதான முன்னெடுப்புக்களின் போதும் பெண்கள் பற்றிய போதிய கவனம் வேண்டும்.
- பெண்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.
- சமத்துவமான சமாதானமான சமூகம் உருவாக அனைவரும் பாடுபட வேண்டும்.
- சமத்துவமான சமாதானமான வீடும் நாடும் வேண்டும்.







உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் இவ் வருடம் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கூழாவடி கிராமத்தில் சமூக நலனை மேம்படுத்தும் நோக்கில் தாய், சேய் நலன் சிகிச்சை தற்காலிக கட்டிடம் ஒன்றினை வூஸ்க் அமைப்பின் அனுசரனையுடன் திறந்து வைத்ததுடன் மரபுரீதியற்ற தொழில் பயிற்ச்சி முடித்த பெண்களுக்கு தொழில் உபகரணங்களையும் வழங்கியது, மற்றும் இதன் சமூக விழிப்புணர்வூட்டும் கலை நிகழ்வுகளில் தேடல் நாடகக் குழுவினதும், கலாபம் கலைக்குழுவினதும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை களையும் நாடகங்கள் இடம் பெற்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழிலும் பெண்களின் நலனும்



சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் தம் வாழ்வை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளார்கள். சிறு சிறு நிவாரணங்களையே நம்பி பெறுமதிமிக்க வாழ்க்கையை இழுத்தடிக்கும் நிலைமையில் இருந்து மீண்டெழுவது மிகவும் முக்கியம் என உணர்ந்துள்ள இவர்கள் இதற்கான சகல முயற்சிகளிலும் இறங்கியுள்ளனர். "மீன் கொடுத்தது போதும் தூண்டிலை கொடு" எனும் இவர்களின் கோரிக்கைக்கிணங்க பல நிறுவனங்கள் இவர்களுக்கான சுய தொழிலை ஆரம்பிப்பதற்குரிய உதவிகளை செய்யத் தொடங்கியுள்ளன.

பூநொச்சுமுனை, நாவற்குடா மீள் குடியேற்றப்பகுதி, மஞ்சந்தொடுவாய் முதியோர் இல்லவீதி, கிரான்குளம் ஆகிய சுனாமியால் தொழில் பாதிக்கப்பட்ட பெண்களின் சுய தொழில்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் செய்து வருகின்றது.

பெண்களின் அபிவிருத்தி எனும் எண்ணக்கருவில் அடங்கும் பொருளாதார அபிவிருத்தி என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். பெண்கள் பெண்களாக வாழ்வதற்கும் தங்கி வாழும் மனநிலையில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கும், வீட்டு வன்முறைகளில் இருந்து பாதுகாக்கவும், அவர்கள் உழைப்பு சுரண்டப்படுவதில் இருந்து தவிர்க்கவும், தலைமைத்துவ பண்புகளை பெறுவதற்கும், சிந்தித்து தீர்மானங்களை எடுப்பதற்கும், சுதந்திரம் உள்ளவர்களாய் அவர்களது தேவைகளை அவர்களே தீர்மானிக்கவும் பெண்களின் பொருளாதார முன்னேற்றம் முக்கியமானதொன்றாகும்.

கடந்த காலங்களில் பெண்களில் அனேகர் சுய தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். காலங்காலமான இவர்களது வீட்டுவேலைக்கான பெறுமதி கணிப்பிடப்படாமல் இருப்பது போலவே (சமையல், குழந்தை பராமரிப்பு, வீடு, வளவு பராமரிப்பு, துணி துவைத்தல்.., ) இவர்கள் வீட்டில் இருந்து மேற்கொள்ளும் சுயதொழிலுக்கான பெறுமதியும் சமூகத்தின் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. (பாய் இழைத்தல், தையல், கால் நடை வளர்ப்பு, சிறுதோட்டம் ...,)

எனினும், சுயதொழில்கள் பெண்கள் தங்கி வாழும் மனநிலையை மாற்றியுள்ளதுடன் பெண்களின் முன்னேற்றத்தில் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளதையும் அவர்களை சந்திப்பதன் மூலம் அறிகின்றோம். அண்மையில் ஏற்பட்ட சுனாமி இவர்களின் சுய தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்களை மீண்டும் தங்கி வாழும் நிலைக்கு மாற்றியும் உள்ளது.



இவ்வாறு பெண்களின் சுயதொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சி நாட்டின் வருமானத்திலும் வளர்ச்சியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயத்திலும் உள்ளது.

இன்று பல நிறுவனங்கள் பெண்களின் சுய தொழிலை கட்டியெழுப்ப உதவி வழங்குகின்றன. இந் நிறுவனங்கள் தொழிலுக்கான உதவி வழங்குவதுடன் நின்றுவிடாது தொடர்ச்சியாக இப் பெண்களின் நலனில் கவனம் செலுத்தல் வேண்டும். சுய தொழில் உதவிகள் வழங்குவதுடன் நின்று விடாது பெண்களின் சுகாதாரம், ஓய்வு, குடும்ப நிலமை போன்றவற்றை அவதானிக்க வேண்டும். இவ் உதவி மூலம் பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ள குடும்பங்களில் குடும்ப அங்கத்தவர்கள் (கணவன், பிள்ளைகள்) அனைவருடனும் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பை செய்யும் ஒட்டுமொத்த பெண் தொழிலாளர்களின் உரிமைகள் நலன்களின் அரசு உரிய அக்கறை செலுத்துகின்றதா என்பது கேள்விக்குறியே ஆகவே இவர்கள் உரிமைகள் நலன்கள் தொடர்பாக சுயதொழில் கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்ச்சியான கண்காணிப்பில் ஈடுபட வேண்டும். பெண்கள் உரிமைகள், நலன்கள், புறக்கணிக்கப்படும், மீறப்படும் சந்தர்பங்களில் இது சார்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# விளக்கின் அடியில்..

"நாம் விழுவதும் இயற்கையின் விளையாட்டு, நாம் எழுவதும் இயற்கையின் உடன்பாடே". பல்வேறு வகையான அனர்த்தங்களை இவ்வாறு இயற்கையின் தலையில் சுமத்தி விடுதல் சில சந்தர்ப்பங்களில் எம் வாழ்வை மீளக் கட்டியெ ழுப்புவதற்கு இலகுவாய் உள்ளது.

அனர்த்தங்களுக்குட்பட்ட பலர் இன்று தம் வாழ்வை கட்டியெழுப்பி வருகின்றனர். இதற்கு சொந்த முயற்சியும் அடுத்தவர் அனுசரனைகளும் அதிகம் தேவைப்படுகிறது. மக்கள் என்ற ரீதியில் ஒரு பொதுவான கண்ணோட்டத்தில் இன்று உதவிகள் வழங்கப்படுகிறது. பிரச்சினைகள் விளங்கிக்கொள்ளப்படுகிறது. கேட்கப்படுகிறது. நிவாரணம் பகிரப்படுகிறது.


ஆனால் அனர்த்த சூழ் நிலைகளில் அதிகம் பாதிக்கப்படுவர்களாக உள்ள பெண்களின் வாழ்க்கை சுமை நிறைந்ததாகவே ஆகிவிடுகிறது. சுனாமியில் இங்கு பெண்களின் பிரச்சனைகள் எந்த அளவுக்கு உணரப்படுகிறது, துயரங்கள் தீக்கப்படுகிறது, சுமைகள் அதிகரித்துள்ளதா எனும் கேள்விகளின் பின்னால் பெண்களின் மீது பிரத்தியேகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது பின்வரும் எமது நேரடிச் சந்திப்புக்களில் இருந்து தெளிவாகின்றது.

**சந்திப்பு I. வயது– 35**
**நிலை – சுனாமியில் கணவனை இழந்தவர்**

சுனாமியில் கணவனை இழந்த இவர் தற்போது நலன்புரி நிலைய மொன்றில் 5 குழந்தைகளுடன் வாழ்கிறார். தன்னுடைய தொழில், குழந்தைகளின் கல்வி, அரசின் தொண்டு நிருவனங்களின் உதவிகள், வீட்டு வேலைகள், நிரந்தர வசிப்பிடம், மறு திருமணம் போன்ற விடயங்கள் பற்றிய இப்பெண்ணின் கருத்து...

தற்போது ஒரு உதவி வழங்கும் நிறுவனம் சிறுகடை வைப்பதற்காக உதவி வழங்கியுள்ளது. தான் வாழும் தற்காலிக வசிப்பிடத்தில் அக்கடையை வைத்துள்ளார். மக்களுக்கு வழங்கியுள்ள தற்காலிக இருப்பிடமோ போதிய வசதியில்லாதுள்ள நிலையில் 5 குழந்தைகளுடன் கடையும் இருப்பிடப் பிரச்சினையை இவருக்கு அதிகம் ஏற்படுத்தியுள்ளது.

மற்றும் தற்போது இவரது தினசரி வாழ்க்கை இயந்திரமாக இயங்க வேண்டியுள்ளது. காலையில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். அவர்களுக்கான காலை உணவுகளை கவனிக்க வேண்டும். வசிப்பிடத்தை சுத்தப்படுத்த வேண்டும். கடைக்குத் தேவையான பொருட்களை ஆட்டோ பிடித்து நகரிற்கு சென்று வாங்கி வர வேண்டும். அனைவருக்



குமான உணவு தயார்படுத்த வேண்டும். பின்னேரங்களில் வீட்டு வேலைகளுடன், கடை வியாபாரம், பிள்ளைகளின் மறுநாள் பாடசாலை ஆயத்தம் என இயந்திரமாக இயங்கும் இவரின் மறு திருமணத்தைப் பற்றிய கருத்து...,

"தனித்து முழு வேலையும் செய்வது சரியான கஷ்டம் தான்.. சுமையை குறைக்க இன்னொரு கலியாணம் கட்டினா.. வாறவன் நாளைக்கு 'ஆருக்கோ பிறந்த பிள்ளைகள் என்று இந்த ஐந்து பிள்ளையையும் சொல்லுவான். என்க்கும் பிள்ளைகளுக்கும் கொடுமைகள் செய்ய மாட்டான் என்று என்ன நிச்சயம்..? இவர் சாகு முன்பும் இதே மாதிரிதான் என் நிலை. வீட்டில கடை போட்டிருந்தன் கடச்சாமான் வேண்டித்தர உதவியாக இருந்தார்... இப்ப எல்லாம் தனிச்சு செய்வது கஷ்டம்தான்.. கஷ்டம் குறைய இன்னொரு கலியாணம் கட்டினா.. பிறகு வாற துன்பங்கள் எங்களுக்கு தெரியாதா?".

வீட்டுப்பராமரிப்பு, பிள்ளைகள் வளர்ப்பு, வருமானத்திற்கான தொழில், இத்தனையும் எந்த வித வசதியுமின்றிய பரிச்சயமின்றிய, பாதுகாப்பின்றிய நிரந்தர இடம் பற்றிய உத்தரவாதமின்றிய வெய்யில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளுங்கும் தகரங்களுடன் கூடிய இடைத் தங்கல் முகாமிற்குள் இப்பெண்ணின் வாழ்க்கை போகிறது.

**சந்திப்பு - II வயது - 36**

**நிலை - சுனாமியில் கணவரை இழந்தவர்**

இரு சிறு குழந்தைகளுடன் தாயின் பராமரிப்பில் வாழும் முஸ்லிம் பெண்ணின் சோகக் கருத்து இது: சுனாமிக்குப் பின் தம்பியின் பராமரிப்பு இருந்தது. தற்போது அவரும் கலியானம் கட்டிற்று போயித்தார் கணவன் இறந்ததும் "இத்தா" இருந்த காலத்தில் பிள்ளைகளின் படிப்பிற்கு ஒரு நிறுவனம் பிள்ளைகளின் பெயர்களை பதிந்தனர். 'இத்தா' முடிந்ததும் நான் அந்த நிறுவனத் திடம் சென்று விசாரிக்க நான் அவங்க சொன்ன காலத்திற்குள் வரல்லையாம். என்ர போமும் தொலைஞ்சு போயித்தாம். என்ர கணவன் கடல் தொழில் செய்தவர் மீன்பிடி சங்கத் திலும் இருந்தவர். மீன்பிடி சங்கத்தால வோட் (board) கொடுத்தாங்க. நான் போய்க் கேட்டன் "நீ என்ன




கடலுக்கா போகப்போறா தர ஏலாது" என்று சொல்லித் தாங்க. எனக்கு ஒரு கைவேலையும் தெரியாது. நானும் சுனாமியால பாதிக்கப்பட்ட மீன்பிடி குடும்பம் தானே. எனக்கும் வோட், வலை தந்தா வாடகைக்கு விட்டு பிள்ளைகள படிப்பிக்க ஒரு வருமானமாவது கிடைச்சி ருக்கும். விதானையார்கிட்ட போனன். அவர் குறிச்ச சுனாமி எல்லைக்குள்ள என்ர வீடு இல்லாததால என்ன அவரும் பதிய ஏலாண்டுத்தார். நிறுவனங்கள் கணக்கெடுக்கிற எல்லைக்குள்ளும் நான் இல்ல. என்ர கணவர் கடலுக்குப் போனாப்பில சுனாமில போயித்தார்.. கணக்கெடுத்து சுனாமி வேலை செய்யிற இந்த அரசாங்கமும், நிறுவனங் களும் இழப்பென்று பாதிப்பென்று எதை சொல்லுது.... உயிரையா.., உடமையையா.., தொழிலையா... எல்லை யையா..?

"சின்ன வயது உதவி இல்லாம வாழ முடியாது இன்னொரு கலியாணம் கட்டு" என்று எல்லாரும் சொல்லு றாங்க. சொந்த பிள்ளைகளையே கொடுமை செய்யிற இந்தக் காலத்தில என்ர பிள்ளைகளை இனி வாறவங்க கொடுமை செய்ய மாட்டாங்க என்றது என்ன நிச்சயம். என்ர கணவர் என்னோடயும் பிள்ளைகளோடும் நல்ல அன்பர இருந்தவர். அவர மறந்து எனக்கு இன்னொரு கலியாணமும் வேண்டாம், புதுசா வாறவன்ர கொடுமை யும் வேண்டாம்".

**சந்திப்பு III - வயது -39**

**நிலை - சுனாமியில் மனைவியை இழந்தவர்.**

**தற்போது மறு திருமணம் முடித்துள்ளார்.**

'மனைவி செத்தாப் பிறகு திரும்ப கலியாணம் கட்டும் வரைக்கும் 3 பிள்ளைகளோட சரியா கஷ்டப்பட்டுத்தன். பிள்ளைகள் வளர்ப்போட வேலைக்கும் போறது, சுனாமி சாமான்களுக்கு பதிஞ்சலைவது.., தண்ணிக்கு அலைவது... சமைச்சு பிள்ளைகள் உடுப்பு தோஞ்சி.. நிரந்தரம் இல்லாத முகாம்களுக்குள் நினைச்சே பார்க்க முடியா அவ்வளவு கஷ்டம். திரும்ப ஒரு கலியாணம் கட்டினாபிறகு இப்ப பிரச்சனை இல்ல. நான் வெளி அலுவல்கள் பாத்தா இவ வீட்ட பிள்ளைகள் பாக்கிறது..., சமைக்கிறது, உடுப்பு தோய்க்கிறது, முகாம்களுக்குள் பதியிறது, தண்ணி எடுக்கிறது. இப்ப இவவும் பிள்ளத் தாச்சி..'

தமக்கான வாழ்வை பெண்ணும் ஆணும் எப்படி உணர்கிறார்கள்? எதிர்காலத்தை கட்டியெழுப்புவதில் இருவருக்கு முள்ள உணர்வென்ன? பலமென்ன? வித்தி யாசமென்ன..? இவர்கள் வாழ்வை மீளக் கட்டியெழுப் புவதில் முனைப்புக் கொண்டு செயற்படும் நிவாரணக் குழுக்கள் இந்த வித்தியாசங்களை நோக்கிச் செயற் படாவிட்டால். நிலையான ஆழமான சமத்துவமான சமாதானமான சந்தோசமான உண்மையான நீண்ட வாழ்வை மக்களிடையே எப்படிக் கட்டியெழுப்ப முடியும்?

**பயணம் நோக்கி...**

நகர்ந்து போகும்
வாழ்வின் எல்லைவரை
தொடரும் பயணங்கள்
முடியும் வரை
இடையூறுகளால்
அமைக்கப்பட்ட
வரையறை முகாம்கள்
உனக்கு மட்டும் எதற்கு?

சுதந்திர தாகத்தால்
துடிக்கின்ற வாழ்வும்
வழி நடுவே வீசப்பட்ட
முடர்களின்
தடை முட்களை மீறி
சிதைந்து போகிறது
உன் பயணத்தில்

அலைகளின்
ஆவேச
உதைகளுக்கெல்லாம்
மௌனித்துக் கிடக்கும்
ஊமைக் கரைபோல
உனை நிர்ணயிக்கும்
இக்கொடும் சமூகம்
உன் சவாரிக்கொரு
சவால்தான்!

எஸ். ஏ. கோகுலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக பெண்களுக்கு நிகழ்த்தப்படும் வன்முறைகள்

> "............................
> எத்தனை காலந்தான்
> இழுபட்ட போலி வாழ்வு
> வறட்டுத் தனங்களும்
> சுயநலப் போக்குகளும்
> வக்கிர எண்ணங்களும்
> சூழ்ந்து கொண்ட
> கொடுமை வாழ்வு".

வளர்ந்து வரும் இந்த தொழில்நுட்ப யுகத்தில் காலங்களும் கோலங்களும் பலவகையிலும் மாறிக்கொண்டு சென்றாலும் சட்ட திட்டங்களில் பெண்கள் சுதந்திரமாக வாழலாம் என்று ஏட்டளவில் வெளியாகினாலும், நாகரீகம் வளர்ந்து விட்டாலும் மனிதனுடைய எண்ணங்கள் என்னமோ மூர்க்கத்தனமானவையாகவும் காட்டு மிராண்டிதனமானவையாகவும் மிகக் கொடூரமாக மாறி வருகின்றது. இதில் பெண்கள் பலர் பலியாகிவிடுகின்றனர். இதற்குள் தோட்ட புறங்களில் உள்ள அப்பாவி மலையகப் பெண்கள் எதிர் கொண்டு வரும் வன்முறைகளோ எழுதி விளக்கிட முடியாது.

கீழே நாம் விபரிப்பவை வெறும் கற்பனை கதைகள் அல்ல இவை அனைத்தும் உண்மை சம்பவங்கள் இவற்றில் காட்டப்படும் வன்முறைகள் எதுவுமே வெளிக் கொண்டு வரப்படவில்லை.

மலையக சமூகங்களில் நடைபெற்ற உண்மையான சம்பவங்கள் சிலவற்றை நாங்கள் இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

> *அழகான நிலவு, குளிர்தரும் இரவு, பனியின் வெண்மை... அம்புலிக்கு போகலாம் என அமுதூட்டிய அன்னையும் அறியாத உண்மை,*
>
> *........ அங்கே இருப்பதுவோ இருள் அடர்ந்த வெளிகளும் இரும்பான பாறைகளும் இன்னும் வெளித் தெரியாத பயங்கர ரகசியங்களும் என்பதை.*
>
> *மனதை அள்ளும் சந்திரன் போலவே இங்கும் இன்னொரு அம்புலி இலங்கையில் உள்ளதை எம் காதுகள் அறிகின்றன.*
>
> *மலையகப் பசுமை மனங்களில் இருக்கும். அங்கு வாழும் பெண்களின் ரணங்களோ பசுமைக்குள் மறைக்கப்பட்டிருக்கும்.... இன்னும் கீழ் இறங்கி வராத துயரங்களுடன் பெண்களின் உழைப்பு சுரண்டப்படும், பாலியல் துஷ்பிரயோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும், உடல்கள் உரமாக எரியும் உணர்வுடன் தேயிலைச் செடிகள் கொழுந்து விட்டு வளரும்.*
>
> *அதிகார வர்க்கத்துக்கும், சமூக அடக்குமுறைக்கும் பயந்தகுயில்கள், தம்மை வெளிப்படுத்தாது சோகம் பாடும், மலைகளின் காடுகளில் தம் முகம் மறைத்து. குயில்களின் குரல்களில் இத்தனை சோகங்களும் சொட்டுச் சொட்டாய் வழிய எங்கும் பரவாத படி தடுத்து நிற்கிறது மலை அரண்களும், முதலாளியர் மாளிகைகளும்.....*
>
> *அதன் கீதங்கள் கரையும், காற்றினில் பரவும், மண்ணில் இறங்க அவை எம் மனங்களை சுடும்.*

எத்தனை வன்முறைகள் உண்மைச் சம்பவங்கள் இவை..... பாடசாலை செல்லும் மாணவி, தந்தையான ஒருவரினால் தாயாக்கப் பட்டது.....

தந்தையால் பாலியல் வல்லுறவாக்கப்பட்ட சிறுமி கொலை செய்யப்பட்டது...., தந்தையால் 2 வயதுக் குழந்தை தாயின் முன்னிலையில் கொடூரமாக வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு சாகடிக் கப்பட்டது.

தங்கை தமக்கையின் கணவரால் கர்ப்பமாக் கப்பட்டு சமூகத்தின் பழி சுமந்தது. தோட்ட வைத்திய நியமனத்திற்கு சென்ற பெண் முகாமையாளரிடம் தனது நியம னத்துக்கு லஞ்சமாக அவளது உடலைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத் துக்குள்ளானது....,



மனைவி கணவனால் தினமும் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப் படுவது....,

இப்படியான நிகழ்வுகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மலையகப் பெண்களின் நிலை கேள்விக்குறியாகிவிடும். இவற்றுக்கு இந்நிலைக்கு ஏதாவது ஒரு வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**- ராணி வேணி -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்காத பட்டங்கள்

எம்மால் முடியும்- இது ஆண் பெண் சிறுவர்களின் ஒருமித்த குரல். சிறுவர்கள் வளர அவர்கள் பெரியவர்களாக

"எம்மால் முடியும் முடிந்ததை செய்வதற்கு எல்லையும் இல்லை. கட்டுப்பாடும் இல்லை. ஏனென்றல் நாங்கள் ஆண்கள்" இது ஆண்கள் குரல்களாகவும்,

"எம்மால் முடியும் ஆனால் முடிந்ததை எல்லாம் செய்ய முடியாது ஏனென்றல்நாங்கள் பெண்கள்" இது பெண்கள் குரல்களாகவும் ஒலிக் கின்றது.

சுயலாபம், சுயவளர்ச்சி கருதிய ஆதிக்க சமூகத்தின் கொள்கைகளும் விளக்கங்களும் கருத்துருவாக்கங்களும் பெண்களை தமது பணியாட்களாய் அமர்த்திக் கொள்வதற்காக பெண்களின் "முடியும்" திறமைகளுக்கு முடிச்சுப் போடுகிறது. விரியும் கைகளுக்கு எல்லை விதிக்கிறது. பூமாதேவி எனும் பட்டம் கொடுத்து ஏணிப்படிகளாக்கி உட்காரவைத்து ஏறி உயர்கிறது. கைகட்டி சேவகம் செய்ய மந்திரம் சொல்லி வீட்டுக்குள் முடக்கிப் போடுகிறது.

பறக்க முடியாத இந்தப் பட்டங்களை சுமப்பதில் பெண்கள் சமூகத்திற்கென்னலாபம்... தங்களுக்கெதிரான வன்முறைகளைத்தடுக்க முடிகிறதா...... இல்லை சிறு வயது கனவுகள் ஆர்வங்கள்தான் நனவாகின்றதா...?

பெண்ணையும் பூமியையும் சுரண்டி பெண்களுக்கெதிரான அநீதிகளை உண்டாக்கி சமாதானமற்ற சமத்துவமற்ற சமுகத்தை உருவாக் கும், அதிகார பூதங்களுக்கு உழைத்ததுதான் பெண்கள் கண்ட மிச்சம் ஆகிறது.

வேற்றுமையின்றிய ஆற்றல்களும் வெளிப் பாடுகளுமே நிலையான அபிவிருத்தியையும் சமத்து வமான சமூகத்தையும் உருவாக்கும். இந்த அடிப்படையில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் நடத்திய எழுத்தாளர் பயிற்சி பட்டறையில் முடிச்சுக்கள் அற்ற பெண்களின் கற்பனைகளும் ஆற்றல்களும் பின்வரும் கவிதை வரிகளாக வெளிப் பட்டன.

"பொந்துக்குள்ள பூந்த நண்டை
பிடித்துப் பெடியன்கள் பெட்டை தலையில்
விட்டதனை மறக்கமுடியல்ல
வானரங்கள் போல நாங்கள்
மரத்தில் ஏறினோம்
மாம்பிஞ்சு, புளியம்பிஞ்சு
மகிழ்ந்து உண்டோமே"

* * * *

"குச்சு வீடு கட்டி நாங்கள்
சோறு கறி ஆக்க வேண்டும்
குட்டித் தங்கை தம்பியர்க்கு
பகிர்ந்து அதைக் கொடுக்க வேண்டும்"
"கூவும் குயில் ஓயும் வரை
போட்டி போட்டுக் கூவ வேண்டும்"

* * * *

"குஞ்சு மீனைக் கைகளினால்
அள்ளி நாங்கள் பார்க்க வேண்டும்
மீண்டும் அதை குளத்தில் விட்டு
ஓடும் அதை ரசிக்க வேண்டும்"

* * * *

"அண்ணா ஓடும் மோட்டார் சைக்கிள்
ஓடும் ஆசை எனக்குண்டு"
"ஆண்டில் ஒன்று ஆடும் கூத்தில்
ஆணின் வேடம் போட ஆசை"
"ஆசைகளை வெற்றிகண்டு
ஆனந்தமாய் ஆட ஆசை"

இவ்வாறான சின்னப்பருவத்து ஆசைகளை பெண்கள் அறியா வயதில் விட்ட தவறுகள் என்று கூறி பெண்களின் ஆனந்த வாழ்வு பிறருக்காக வடிவமைக் கப்படுகிறது.

எனினும் பெண்களின் கால்கள் தடுக்கப்பட் டாலும், உழைப்பு பறிக்கப்பட்டாலும் கற்பனைகள் மலர்கிறது. வேற்றுமை இன்றியே வளர்கிறது.

"விண்மீனை வலை வீச
விழவேண்டும் நிலவு இங்கு
வானத்திலே பாய் விரித்து
பார்க்க வேண்டும் பூமிபந்தை"

என நுனி விரல் அசைவில் மலையையே அசைக்கும் தன் புத்திக் கூர்மையை தன் ஆசையை இக்கவிதை வெளிப்படுத்துகிறது.

மானுட ஒற்றுமையின் அழகை புலப்படுத்தும் கவிதையாய்

"சொந்த வாழ்வின் சோகங்களை
தாங்கி நின்று வெற்றி கொள்வோம்
சோர்ந்து சோர்ந்து வீழ்ந்திடாமல்
சேர்ந்து நின்றே வெற்றி கொள்வோம்"

என பெண்களின் ஒற்றுமை வெளி வருகிறது.

கலங்கரை விளக்காய் மனத்திடம் கொண்டு பெண்கள்

"எத்துறை வேண்டுஞ் சொல்லு - அவை
அத்தனையும் வெல்வோம்
எட்டுத்திசைகளிலும் பெண்கள்
எட்டிடுவோம் சிகரம்" என பயணிக்கின்றனர்.

எரிகின்ற வீட்டில் பிடுங்குவது மிச்சம் என அலையும் சமூகத்தைப் பார்த்து

வறுமையின் கொடுமை கண்டு
வயிற்றில் அடிக்கிறார்
வாடுவோர் துயரங்களை
கேட்க மறுக்கிறார்
வெயிலின் கொடுமையிலே
பாதங்கள் சுடவில்லை
வேதனையின் விளிம்பிலே
கண்ணீருக்குப் பஞ்சமில்லை

என ஒரு பெண் கவிஞர் சினந்து பாடுகிறார்.

இவ்வாறு இலகுவான மனதுடன் பெண்கள் தம் உணர்வுகளை பயிற்சி வகுப்பில் வெளிப் படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய உணர்வுகள்...!

துச்சாதனனால் துகிலுரியப்பட்ட
திரௌபதைகளல்ல
பெண்கள்
நாங்கள் இன்று

பெண்களின் வெற்றியின்
படிக்கட்டுகளை
வேடிக்கை பார்க்கும்
சமுதாயத்தின்
சம்பிரதாயத்திலிருந்து
சற்று விலகி....
புதிதான உணர்வுகளுடன்
புறப்படுகிறேன் - நாளை
நம் பெண்ணினத்துக்காய்
நாம் இந்த உலகிற்கு

வேதனைகளால் விலங்கிடப்பட்டு
மூச்சுக்கு மூச்சு
முனகிடும் சத்தங்கள் - இன்றும்
மூலைக்குள்
முகவரியில்லாத முகங்களாய்
மூன்று முடிச்சுக்குள்
முட்டாளாகிய நாட்கள்
முடியட்டும்.

அடாவடித்தனமான
சமுதாய இம்சைகளை
அடக்கிடுவோம்
எதிர்காலங்கள் ஏணிப்படிகளாய்
எங்கள் கைகளில்

தங்கராஜா குமுதினி
மண்டூர்.

## கடந்த வருடம் பூத்தவை







## பெற்றுக்கொள்ளலாம்

**வருடாந்த சந்தா - பெண்**

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
USS 5
இந்தியா
ரூபா 300.00
இலங்கை
ரூபா 100.00

சந்தா விண்ணப்பம் 200.......................
பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.

பெயர் : ..............................................
விலாசம் : ..............................................
திகதி : ..............................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள்
அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

## தீயாக நீ இரு!

பெண்ணே பேதை பேதை
என்று சொல்லி உன்னைப்
பீதிக்குள்ளாக்கிடுவர்

காதல் என்ற பேரில் - உன்
உணர்வுகளையும் தூய்மையான
எண்ணங்களையும் களவாட
வருவர் வேறு சிலர்


கவனமாய் இரு கண்ணே!
உன்னிதயத்தை வான் என்றும்
உன்னை நிலவென்றும் மலரென்றும்
சொல்லி சுசக்கி எறிந்திடுவர்
மதிமயங்க வைத்திடுவர் - நம்
வாழ்வை இருள்சூழ வைத்திடுவர்.

அன்பென்று ஆசைகளை
உனக்கூட்டி அவர்களது
அதிகாரத்தை அரங்கேற்றி
வைத்திடுவர் உன்னை
அடிமையாய் மிதித்திடுவர்.

பார்த்தவுடன் அவர்களை பார்வையாலே
எரித்து விடு - எண்ணத்தினால்
தூற்றிவிடு நெஞ்சத்தினால்
சபித்து விடு.

தீயாக நாமிருந்தால் - நமைத்
தொட யார் வருவார்?

A. சிதாரா
ஏறாவூர்





சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல. 20, டயஸ்லேன்,
மட்டக்களப்பு.
தொ.பேசி - 065-2223297


முகவரி. [illegible]
[illegible]
[illegible]
யாழ்ப்பாணம்
..............................................

Issn No. 1391-6130



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org